# தமிழ் நாடு சட்டப் பேரவை

---

**செவ்வாய்க்கிழமை, 1973 ஆகஸ்ட் 7**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. நீத்தார் நினைவுக் குறிப்பு

**முன்னாள் உறுப்பினர் திரு. கே. கே. சுப்பண்ண கவுண்டர் அவர்கள் மறைவுகுறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கோபிச்செட்டிபாளையம் பொது—கிராமப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1946-ஆம் ஆண்டு முதல் 1952-ஆம் ஆண்டுவரை உறுப்பினராக இருந்த திரு. கே. கே. சுப்பண்ண கவுண்டர் அவர்கள் 5—8—1973-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவையின் சார்பில் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்திற்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.)

## 2. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

**திருச்சிராப்பள்ளி மாவட்ட அரசு அலுவலகங்களில் வேலை நேரம்**

*26 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரசு அலுவலக வேலை நேரம் 1973 ஏப்ரல் முதல் மாற்றப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், இதற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) ஆம்.

(இ) மின்வெட்டு நிலைமையையொட்டி நாள்தோறும் அரசு அலுவலகங்கள் மாலை 4.30 மணிக்கே மூடப்படலாம் என்று திருச்சிராப்பள்ளி வர்த்தகக் கழகம் அரசைக் கேட்டுக் கொண்டது. அதற்கிணங்க திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள அரசு அலுவலகங்களின் வேலை நேரம் காலை 10.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை என்றிருப்பதற்குப் பதிலாகக் காலை 10.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை என்று இருக்கும்படி மாற்றியமைக்க அனுமதி வழங்குமாறு திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அரசைக் கேட்டுக் கொண்டார். மாவட்ட ஆட்சித் தலைவரின் வேண்டுகோளை அரசு ஏற்றுக்கொண்டது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள அரசு அலுவலகங்களின் வேலை நேரம் காலை 10.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை என்றிருப்பதற்குப் பதிலாகக் காலை 10.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை என்றிருக்குமாறு மாற்றியமைத்து அரசு ஆணைகள் பிறப்பித்தது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, காலை நேரம் மிகச் சுறுசுறுப்பான நேரம். ஆகவே, தமிழகத்திலுள்ள எல்லா அரசு அலுவலகங்களையும் நீதி மன்றங்களையும் காலை 9.30 மணி முதல் துவக்குவதுகுறித்து அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இப்படி ஒரு ஆலோசனை முன்பு செய்யப்பட்டு, அவ்வாறு சென்னை மாநகரத்திலுள்ள அரசு அலுவலகங்களினுடைய வேலை நேரம் மாற்றப்பட்டபோது அரசு அலுவலர்கள் அதை விரும்பவில்லை. அதையே மீண்டும் மாற்றியமைப்பதென்றால் அரசு அலுவலர் களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டுதான் செய்ய வேண்டும்.

**திரு. த. சோலையா:** திருச்சி மாவட்டத்தில் அரசு அலுவலர்கள் விரும்பியதற்கிணங்க அரசு அலுவலக நேரத்தை மாற்றியமைத்ததைப்போல, மற்ற மாவட்டங்களிலுள்ளவர் களும் மாற்றத்தை விரும்பி அத்தகைய கோரிக்கையைத் தெரிவித்தால் அதை அரசு பரிசீலனை செய்யுமா?

1973 ஆகஸ்ட் 7]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இது அரசு அலுவலர்களுடைய வேண்டுகோள் அல்ல. திருச்சி வர்த்தகக் கழகம் அரசைக் கேட்டுக் கொண்டது. அதுவும், மின்வெட்டு நிலைமையையொட்டி வைக்கப்பட்ட கோரிக்கையாகும். அந்த அடிப்படையில் தான் அது செய்யப்பட்டது.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவர் அவர்களே, பொதுவாக அரசு அலுவலகங்கள் காலை பத்து, பத்தரை மணிக்குத் தொடங்குகின்றன என்றாலும், அலுவலர்கள் வேலையை ஆரம்பிக்கப் பதினொரு மணி ஆகின்றது. பிறகு ஒரு மணிக்கு உணவு நேரம் வந்துவிடுகிறது. உண்ட மயக்கம் தொண்டனுக்கும் உண்டு என்று சொல்வதுண்டு. அப்படி உறங்குகிற சூழ்நிலை ஏற்படுவதால், காலை 7 மணி முதல் அரசு அலுவலகங்களில் வேலை துவங்கினால் சுறுசுறுப்பாக வேலை நடக்க ஏதுவாக இருக்கும். அரசு அவ்வாறு செய்ய முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை என்று, சென்னை நகரத்தை நான்கு பகுதிகளாகப் பிரித்து, ஏற்கெனவே சில மாற்றங்கள் செய்யப்பட்டன. அரசு அலுவலர்கள் அதற்குப் பெரிய எதிர்ப்புத் தெரிவித்து, மீண்டும் நாம் காலை 10.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை அலுவலக நேரத்தை வைத்துக்கொள்ளலாம் என்று ஆணை பிறப்பித்திருக்கிறோம். ஏற்கெனவே, செய்த மாற்றத்திற்கு எதிர்ப்பு அதிகமாக இருந்ததால் இந்த மாற்றத்தை அரசு அலுவலர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று சொல்ல முடியாது.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, அரசு அலுவலர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க வேலை நேரத்தை மாற்றிக் கொடுத்ததாக முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதே மாதிரி மற்ற அரசு அலுவலகங்களிலும் நேரத்தை மாற்றியமைக்க அரசு ஆலோசனை செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்பொழுது இருக்கிற அலுவல் நேரங்களில் எந்தவிதமான கஷ்டமும் யாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. அதுபோன்ற கோரிக்கை எதுவும் வரவில்லை.

[1973 ஆகஸ்ட் 7

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர்களில் பலர் மாலை நேரங்களில் மேற்படிப்புப் படிக்க இருக்கின்றார்கள். அவர்கள் மாலைக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க வசதியாக இருக்கும்பொருட்டு, அரசு அலுவலகங்களைக் காலை 9 மணிக்கே ஆரம்பிக்கலாம். இதை அவர்களிடத்தில் சொன்னால் நிச்சயமாக அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். பிற்பகல் 3 மணிக்கு அலுவலக நேரத்தை முடித்தால் திருமணம் ஆனவர்கள் சினிமாவுக்குப் போவார்கள். காதலர்கள் கடற்கரைக்குப் போவார்கள். இப்படியெல்லாம் அவர்களிடத்தில் சொன்னால் ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, அரசு அதைச் செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சினிமாத் துறையில் இருக்கிற நண்பருக்கு சினிமா நேரம் தெரியாதிருப்பதற்காக வருந்துகிறேன். இரண்டரை மணிக்கு ஆரம்பமாகிற மேட்டினி ஷோவுக்கு 3 மணிக்குப் போனால் அந்த மேட்டினி ஷோவை நிச்சயமாகப் பார்க்க முடியாது. (சிரிப்பு) அரசு அலுவலக நேரம் 10.30 முதல் 5.00 வரை என்று இருந்ததை 9.30 முதல் 4.00 என்றும், சில அலுவலகங்களை 9.00 முதல் 3.30 என்றும், தலைமைச் செயலகத்தில் 9.30 முதல் 4.00 வரை என்றும் ஏற்கெனவே நாம் திட்டம் வகுத்து, அதுபோல் வேலை நேரங்களை வைக்கலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால், தலைமைச் செயலக அலுவலர்கள் ஒரு கூட்டமே போட்டு, அதற்கு என்னையும் அழைத்து, ஒரு கோரிக்கை வைத்து, உடனடியாக வேலை நேரத்தை மாற்றவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதற்குப் பிறகுதான் 9.30 என்பதை 10.00 ஆகவும் 4 மணி என்பதை 4.30 ஆகவும் மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

### சென்னை மாநகரில் அசாதாரண மரணங்கள்.

*27 வினா—**திரு. கே. டி. கே. தங்கமணி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் தற்கொலை போன்ற அசாதாரணமான மரணங்கள் அதிக அளவில் நிகழ்ந்துள்ளன என்பது உண்மையா?